அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 4/91

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1991, பெப்ரவரி மாதம் 17ஆந் திகதி

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபை ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அனைத்து அரசாங்கதிபர்களுக்கும்.

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் நிலவரத்தினால் பாதிப்புற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட லீவுகள்.**

1990.08.07ஆந் திகதி 33/90ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையுடன் தொடர்புடையதாகும்.

02. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமைபுரியும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 1990 ஜூன் மாதத்தின் பொருட்டு மேற்கூறிய சுற்று நிருபத்தின் மூலம் விசேட லீவுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பின் கீழ்வரும் மாவட்டங்களில் கடமைபுரியும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அத்தகைய மாவட்டங்களுக்கு நேராக காட்டப்பட்டுள்ள கால எல்லைகளின் பொருட்டு விசேட லீவுகள் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

1. அம்பாறை - 90.06.12ந் திகதி முதல் 90.09.01 வரை
2. மட்டக்களப்பு - 90.06.12ந் திகதி முதல் 90.09.03 வரை
3. திருகோணமலை - 90.06.12ந் திகதி முதல் 90.09.01 வரை

03. மேற்கூறிய நீடிக்கப்பட்ட கால எல்லைக்குப் பின்பும், அம் மூன்று மாவட்டங்களிலும் பணிபுரியும் அரசாங்க உத்தியோகத்தர்கள் கடமைக்கு வராமல் இருந்திருப்பின் சேவையை விட்டு நீங்கிச் சென்றமைக்கான அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்கியிருத்தல் வேண்டும். எவ்வாறு இருப்பினும் சேவையை விட்டு நீங்கிச் சென்ற உத்தியோகத்தர் ஒருவர் பின் மேன்முறையீடு செய்யின், மாகாணச் சபைகள் உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகவெனின் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் ஆளுநரும், மத்திய அரசாங்கத்தின் உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகவெனின் அந்தந்த மாவட்டங்களின் அரசாங்கதிபர்களும் அவை சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் தேடிப் பார்த்தல் வேண்டும்.

04. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் கடமைபுரியும் எனினும் தமது லீவுகளுக்கு முறைப்படி அனுமதி பெற்று அத்தகைய பிரதேசங்களுக்கு சென்று திரும்பி வராத உத்தியோகத்தர்களுக்கும் சேவையை விட்டு நீங்கிச் சென்றமைக்கான அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டியிருந்தன. எனினும் அத்தகைய உத்தியோகத்தர் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அபேட்சையாக தனது விடுதலைக்கான காரணங்களை முன்னளிப்பின் அது சம்பந்தமாக திணைக்களத் தலைவர் தனிப்பட்ட முறையில் ஆராய்ந்துப் பார்த்து ஏற்றுக் கொள்ள முடிந்ததாக இருப்பின் கீழ்வருமாறு லீவுகள் வழங்கலாம்.

1. எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் 1990.06.12ஆந் திகதிக்கு முன்பு லீவில் சென்றிருப்பின் இங்கு 05ஆம் பந்தியில் காட்டப்பட்டு உள்ள நிபந்தனைகளுக்கு கீழ்படிய விசேட லீவுகளை வழங்கலாம்.

11. எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் 1990.06.12ஆந் திகதிக்கு பின்பு லீவில் சென்றிருப்பின் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு இங்கு பந்தி 05இல் காட்டப்பட்டுள்ளபடி அவரது தனிப்பட்ட லீவில் இருந்து குறைத்தல் வேண்டும்.

05. இங்கு கீழ்வரும் விடயங்களுக்கு இணங்க லீவுகளை அனுமதிக்கும் அதிகாரம் வாய்ந்தவர் திருப்தியுறின் மேல் பந்தி 03,04இல் காட்டப்பட்டுள்ளவாறு விடுமுறை வழங்கலாம்.

1. தன்னால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களால் உத்தியோகத்தர் களுக்கு தமது கடமைக்கு வர முடியாமல் இருந்தமை.

11. உத்தியோகத்தர் அநாதை முகாமொன்றில் சீவித்தல் அல்லது வேறு அரசாங்க காரியாலயமொன்றில் கடமைக்குச் சமுகமளித்தல் / (அநாதை முகாமொன்றில் இருக்காவிடில் ) அநாதை முகாமுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்து அல்லது வெளிசேவை உத்தியோகத்தரிடமிருந்து சாட்சியாக எழுத்து மூலமான சான்றிதலொன்றை தான் கடமைக்கு வராத நாட்களின் பொருட்டு முன் வழங்குதல் வேண்டும்.

06. விசேட லீவுகள் அல்லது தனிப்பட்ட சொந்த லீவுகளுக்கான (சம்பள மற்ற லீவுகள் தவிர்ந்த) அனுமதியைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு அக் கால எல்லையின் பொருட்டு சம்பளங்கள் வழங்கலாம்.

ஒப்பம்: ஆர். அபேரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.